



# கிறிஸ்துவின் வசனம்


ஆசிரியர்
B. அர்ச்சுனன்

## நாளைய தினத்தைக் குறித்து பரிசுத்த வேதாகமம் கூறும் அறிவுரைகள்



- ஆயிரம் நாளைப் பார்க்கிலும் உமது பிரகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது (சங்கீதம் 84:10).
- நாளைய தினத்தைக் குறித்துப் பெருமைபாராட்டாதே (நீதிமொழிகள் 27:1).
- நாளைக்காக கவலைப்படாதிருங்கள் (மத்தேயு 6:34).
- நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே (யாக்கோபு 4:14).

## வாசகர் கடிதம்

**இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்திற்கு ஸ்தோத்திரம்.**

சகோதரர் அவர்களுக்கு 'கிறிஸ்துவின் வசனம்' ஆகஸ்டு '97 இதழ் ஒன்றினை ஒரு பேருந்தின் இருக்கையின் கீழே கண்டேன். அதில் பயப்படாதிருங்கள் என்ற தங்கள் தேவசெய்தி எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. தொடர்ந்து தங்களின் இதழை வாசிக்க வாஞ்சையுள்ளவனாக இருக்கின்றேன்.

*திண்டுக்கல்*
*5.10.97.*

*அன்புடன்*
*R. ஜான் பீட்டர்.*

BROTHER IN CHRIST,

Hearty greetings to you in the name of Lord Jesus Christ. Receiving the journal 'Word of Christ' your thoughts of strength and faith on the Lord will lead you to a righteous way to reach your destination. The articles found in the journal gives a new strength.

*Jothampatti*
*18.10.97*

*Yours in Christ,*
*Richard Kanagarajan.*

Published by
**WORLD LITERATURE PUBLICATIONS**
**POST BOX.5**
*BATLAGUNDU - 624 202*
**INDIA.**

# கிறிஸ்துவின் வசனம்

## *WORD OF CHRIST*

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 6 நவம்பர் 1997 கனி 5

ஆசிரியவுரை

## பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டுகிறீர்கள்?

## WHATSOEVER YE BIND ON EARTH?

இந்த உலகத்தில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய ஒன்று "நாம் என்ன செய்கின்றோம்?" இன்று அநேகர் இப்படிப்பட்ட சிந்தனை இல்லாமல் வாழ்ந்து கொண்டு காலத்தை வீணடிக்கின்றனர். பரந்த இந்த உலகத்தில் நாம் ஒரு நோக்கத்தோடு தேவனால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம். ஏதோ பிறந்தோம், மரிக்கிறோம் என்றில்லாமல் ஒரு உண்மையான தேவனுடைய மனுஷனாய் வாழ வேண்டும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கூறுவதைப் பாருங்கள் ! "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்தேயு 18:18). நமது வாழ்க்கை இத்தோடு முடிந்துவிடவில்லை, பரலோகில் நித்திய வாழ்க்கை உண்டென்பதையும், இங்கு நாம் செய்கிற காரியம் காணாத பரலோகில் நம் கணக்கில் எழுதப்படுகிறது என்பதையும் ஆண்டவர் உணர்த்துவதைப் பார்க்கிறோம்.

ஆண்டவராகிய இயேசுவை நாம் முன்மாதிரியாக நோக்குவோம். அவர் இப்பூமியில் மனுஷகுமாரனாக வெளிப்பட்ட போது ஏழ்மையுடன் பிறந்து, ஏழ்மையுடன் வாழ்ந்தார். தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்து, சொந்த கல்லறை கூட இல்லாமல் மரித்து, பின்பு உயிர்த்தெழுந்தார். இந்த உலகத்திலே உன்னதமான தமது சபையைக் கட்டினார் (மத்தேயு 16:18). சாலொமோன் ராஜா கட்டின ஆலயம் அழிந்தது. ஆண்டவரோ என்றென்றும் அழியாத சபையாகிய "கிறிஸ்துவின் சபை"யை கி.பி. 33ல் எருசலேமில் ஸ்தாபித்தார். அச்சபை இன்றும் உலகமெங்கும் பரந்து விரிந்து காணப்படுகிறது.

ஆண்டவர் ஆவிக்குரிய சபையைக் கட்டினார் என்று பார்த்தோம். அவர் நம்மைப் பார்த்து, நீங்கள் பூலோகத்தில் எவைகளைக் கட்டுவீர்களோ, அது பரலோகத்திலும்

கட்டப்பட்டிருக்கும் என்றார். நீங்கள் எவைகளைக் கட்டுகிறீர்கள்? உலகத்திலே யாரும் கட்டியிராத வீட்டையா? அல்லது மனக்கோட்டையையா? நம்முடைய ஆதி முற்பிதாக்கள் "பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு நமக்கு ஒரு நகரத்தையும் வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லி ..." பாபேல் கோபுரத்தைக் கட்டினார்கள் (ஆதியாகமம் 11:4). ஆனால் கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப் பண்ணினார். பிரிய நண்பரே! ஆண்டவர் ஆத்துமாக்களைக் கொண்டு சபையைக் கட்டினார். அதைப்போல் நாமும் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும்படியாக நம்மால் இயன்ற மட்டும் அவர்களுக்கு ஏதாவது ஒருவகையில் உதவியாக இருந்து ஆத்துமாக்களை சபைக்குக் கொண்டுசேர்க்க வேண்டும். இப்படிச் செய்யும்போது பரலோகத்தில் நமது கணக்குப் பெருகும்.

அதே வசனத்தில் பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார். இன்றைய சமுதாயத்தில் சிக்கலை உண்டு பண்ணுகிறவர்கள் தான் அதிகமாக இருக்கின்றனர். கட்டவிழ்ப்பவர்களை நாம் பார்ப்பது மிக அரிதாக இருக்கிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து 18 வருஷமாக சாத்தானால் கட்டப்பட்டிருந்த ஒரு ஸ்திரீயைக் கட்டவிழ்த்து சுகமாக்கியதை நாம் லூக்கா 13:11-12ல் வாசிக்கிறோம். இயேசு கட்டவிழ்த்து சுகமாக்கினார். நாம் அப்படிச் செய்ய முடியுமா? என்று அநேகர் சொல்லுவார்கள். ஒருவேளை கர்த்தர் எனக்கு குணமாக்கும் வரத்தைக் கொடுத்தால் நான் உலகில் உள்ள அனைத்து வியாதிக்காரரையும் குணமாக்கி கட்டவிழ்த்து விடுவேன் என்பர்.

பிரியமானவர்களே ! தேவன் ஒரு மனிதனை நோயிலிருந்தும், பாவத்திலிருந்தும், மரணக்கட்டுகளிலிருந்தும் விடுதலை செய்யும் சக்தியைக் கொடுத்திருக்கிறார். எப்படியென்றால், ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால் அவனோடு இரண்டு மைல் தூரம் போ என்று சொன்ன ஆண்டவர் அவனோடு சேர்ந்து போகும் சக்தியை நமக்குக் கொடுத்திருக்கிறார். நல்ல சமாரியனுடைய உவமையில் அவனுக்கு குணமாக்கும் வரம் ஒன்றும் இல்லை. ஆனால் தேவன் அவனுக்குக் கொடுத்த சக்தியைக் கொண்டு குற்றுயிராகக் கிடந்த ஒரு வழிப்போக்கனைக் காயங்கட்டி, தன் சுய வாகனத்தில் ஏற்றி சத்திரத்திற்குக் கொண்டு போய் குணமாக்கினான். இதுதான் கட்டவிழ்த்தலின் ஊழியம். ஆண்டவரும் நான் வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள், காவலிலிருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள் என்று நம்மைப் பார்த்துக் கூறுவார். இப்பேர்ப்பட்ட கட்டவிழ்த்தலின் ஊழியத்தைச் செய்யும் போது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்.

கர்த்தரின் ஊழியம் ஏசாயா 61:1-3ல் "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனில் துயரப்பட்டவர்களைச் சீர்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்யையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களெனப்படுவார்கள்." ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்து இவ்வாக்கியங்களை நிறைவேற்றினார்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இப்படிப்பட்ட ஊழியத்தை பூமியிலே செய்ய வேண்டும். அப்படிச் செய்வதையே தேவன் விரும்புகிறார். இந்த குறுகிய கால வாழ்க்கையில் ஆவிக்குரிய சபையைக் கட்டி, பாவத்தில் கட்டப்பட்டிருக்கிறவர்களை உலக இரட்சகராகிய கிறிஸ்துவண்டை வழிநடத்தி கட்டவிழ்த்தலின் ஊழியத்தை நிறைவேற்றுவோமாக !

**அவர் (இயேசு) மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள். (எபேசியர் 2:22.)**

## மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்
## A MERRY HEART DOETH GOOD LIKE A MEDICINE

*சகோ. பன்னீர்தாஸ்*

மனிதன் மகிழ்ச்சியாக இருப்பதையே விரும்புகிறான். அதற்காக அநேக உல்லாசமான காரியங்களையும் செய்கிறான். ஆனால் அவனுக்கு உண்மையான மனமகிழ்ச்சி கிடைப்பதில்லை. அவன் மனதில் ஏதோ ஒரு கவலை அல்லது குற்றஉணர்வு அவனை வாட்டுகிறது. அது தான் பாவம் கழுவப்படாமை (அப்போஸ்தலர் 2:16), அல்லது மன்னிக்கப்படாத காரியமாகும் (அப்போஸ்தலர் 2:38). மகிழ்ச்சிக்கு பரிசுத்த வேதாகமம் கூறும் சில வழிகளைப் பார்ப்போம்.

**கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருங்கள் (பிலிப்பியர் 3:1).**

இயேசுகிறிஸ்துவை கர்த்தர் என்று சொல்லப்பட்டிருக்கிறது (II கொரிந்தியர் 4:5; எபேசியர் 4:5-6; I கொரிந்தியர் 8:5-6). கர்த்தருக்குள்

என்றால் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினால் அடக்கம் பண்ணப்படுதல் (ரோமர் 6:3-4). நம்முடைய சகல பாவங்களும் இயேசு கிறிஸ்துவுக்குள் மன்னிக்க நம் பாவங்களுக்காக இயேசுகிறிஸ்து வேதவாக்கியங்களின்படி மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார் (I கொரிந்தியர் 15:1-4). பாவத்தால் நமக்கு மகிழ்ச்சியில்லை. ஒரு மந்திரி ஞானஸ்நானம் பெற்ற பின்பு தான் உண்மையான மகிழ்ச்சியோடுபோனான் என்று அப்போஸ்தலர் 8:39ல் காண்கிறோம். இதனால் நாம் தாகந்தீர்க்கப்படுகிறோம் (I கொரிந்தியர் 12:12-13).

**நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள் (ரோமர் 12:12) :**

மனித வாழ்வில் பல உபத்திரவங்கள் உண்டு. நமக்கு பாடுகள் இருந்தால் தான் மகிமை கிடைக்கும் (II கொரிந்தியர் 1:5). உபத்திரவப் பட்டது நல்லத என்று தாவீது கூறுகிறார். பரலோக சுதந்திரத்தை அடைய மகிழ்ச்சி தான். ஆனால் கொஞ்சம் பாடு அடைய வேண்டும் (I பேதுரு 1:7-10). அல்லாமலும் நமது நம்பிக்கையை அறிக்கை யிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம் (எபிரெயர் 10:23). ஏனெனில், வேதவசனமானது நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக் கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது (தீத்து 2:13).

**நமது நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறகாகச் சந்தோஷப்படுங்கள் (லூக்கா 10:20) :**

உலக சாதனைகள் செய்பவர்களை உலகப்புத்தகத்திலும், அரசியல் தலைவர்களை அரசியல் புத்தகங்களிலும் எழுதப்படு வதுண்டு. ஆனால் ஒரு பாவி மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலோடு இணைந்து விசுவாசமுள்ள வனாய் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போது அவன் பெயர் பரலோகத்தில் எழுதப்படுகிறது (மாற்கு 16:16; எபிரெயர் 12:23-24).

நித்திய நித்தியமாய் நாம் தேவனுடைய மகிழ்ச்சியை அனுபவிக்க பரலோகத்தில் நம் பெயர் எழுதப்பட்டால் யாராலும் அதை அழிக்க முடியாது.

பிரியமானவர்களே ! மனமகிழ்ச்சியால் பல நோய்கள் குணமடைகிறது. மனமகிழ்ச்சி குறைவால் பல நோய்கள் வருகிறது. ஒருவன் கிறிஸ்துவுக்குள் தான் உண்மையான மகிழ்ச்சியை அடைய முடியும் (II கொரிந்தியர் 5:17; I பேதுரு 5:7-10). நம் கவலைகளை அவர்மீது வைத்து நம் வாழ்க்கையை கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சியாக கழிப்போம். ❑

## பெண்கள் பகுதி

# சிப்பிராள், பூவாள் (Shiph-rah, Pu-ah)

*J. குளோரி அர்ச்சனன்*

அன்பான சகோதரிகளே ! யார் இந்த சிப்பிராள், பூவாள்? கர்த்தருக்குப் பயந்திருந்த அருமையான எபிரெய ஸ்திரீகள் தான் இவர்கள். ஆம்! அன்றைய நாட்களில் எகிப்து ராஜாவின் கட்டளைக்குப் பயப்படாமல் கர்த்தருக்குப் பயந்து தங்கள் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட காரணமாயிருந்தவர்கள். இவர்களது இச்செயல் நமக்கு ஒரு அருமையான பாடமாக உள்ளது.

எகிப்தின் ராஜா, சிப்பிராள், பூவாள் என்னும் பேருடைய எபிரெய மருத்துவச்சிகளோடே பேசி : நீங்கள் எபிரெய ஸ்திரீகளுக்கு மருத்துவம் செய்யும் போது, அவர்கள் மணையின்மேல் உட்கார்ந்திருக்கையில் பார்த்து, ஆண் பிள்ளையானால் கொன்றுபோடுங்கள், பெண்பிள்ளையானால் உயிரோடிருக்கட்டும் என்றான். மருத்துவச்சிகளோ தேவனுக்குப் பயந்ததினால், எகிப்தின் ராஜா தங்களுக்கு இட்ட கட்டளைப்படி செய்யாமல், ஆண்பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள் (யாத்திராகமம் 1:15-17). ராஜாவின் கட்டளைப்படி செய்யாவிட்டால் தங்களுக்கு என்னவிதமான தண்டனை வரும் என்றெல்லாம் இவர்கள் அறிந்திருக்கக் கூடும். இருந்தபோதிலும் தேவனுக்குப் பயப்படுதலை தெரிந்து கொண்டார்கள்.

இன்றைய நாட்களில் இவ்விதமான கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீகளை காண்பது அரிதாகவே இருக்கிறது. மனுஷனுக்கும், நிர்வாகத்துக்கும் பயந்து கொண்டு கர்த்தருக்குப் பயப்படுதலை விட்டுவிடுகின்றனர். மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும் (நீதிமொழிகள் 29:25) என்பதை மறந்து உலக ஆசீர்வாதங்களை நாடி, ஓடி முடிவில் தேவ ஆசீர்வாதங்களை இழந்துவிடுகின்றனர்.

பாருங்கள் ! இந்த மருத்துவச்சிகள் தேவனுக்குப் பயந்ததினால், அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார் (யாத்திராகமம் 1:21). நிச்சயமாகவே கர்த்தருக்குப் பயப்படும்போது நம் குடும்பங்களும் தழைக்கும். அழிந்துபோகிற

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இஸ்ரவேல், யூத இராஜாக்கள் - ஓர் கண்ணோட்டம்

### சாலொமோனுக்குப் பின்பு இராஜ்யம் இரண்டாகப்பிரிதல்

### பத்து கோத்திரத்தார் வடக்கு இராஜ்யம் இஸ்ரவேல் என்றழைக்கப்பட்டனர்

| எண் | இஸ்ரவேல் இராஜாக்களின் நாமங்கள் | ஆண்ட காலம் | கர்த்தர் பார்வையில் ஆட்சி | புத்தகம் |
|---|---|---|---|---|
| 1. | யெரொபெயாம் | 22 | மோசம் | 1 இரா.14:9,20 |
| 2. | நாதாப் | 2 | மோசம் | 1 இரா.15:25–26 |
| 3. | பாஷா | 24 | மோசம் | 1 இரா.15:28–34 |
| 4. | ஏலா | 2 | மோசம் | 1 இரா.16:8,12 |
| 5. | சிம்ரி | 7 நாள் | மோசம் | 1 இரா.16:15,19 |
| 6. | உம்ரி | 12 | மிக மோசம் | 1 இரா.16:23,25 |
| 7. | ஆகாப் | 22 | மிக மோசம் | 1 இரா.16:29,30 |
| 8. | அகசியா | 2 | மோசம் | 1 இரா.22:51,52 |
| 9. | யோராம் | 12 | சற்று மோசம் | 2 இரா. 3:1,2 |
| 10. | யெகூ | 28 | சற்று மோசம் | 2 இரா.10:31,36 |
| 11. | யோவாகாஸ் | 17 | மோசம் | 2 இரா.13:1,2 |
| 12. | யோவாஸ் | 16 | மோசம் | 2 இரா.13:10,11 |
| 13. | யெரொபெயாம் II | 41 | மோசம் | 2 இரா.14:23,24 |
| 14. | சகரியா | 6 மாதம் | மோசம் | 2 இரா.15:8,9 |
| 15. | சல்லூம் | 1 மாதம் | மோசம் | 2 இரா.15:13 |
| 16. | மெனாகேம் | 10 | மோசம் | 2 இரா.15:17 |
| 17. | பெக்காசியா | 2 | மோசம் | 2 இரா.15:23,24 |
| 18. | பெக்கா | 20 | மோசம் | 2 இரா.15:27 |
| 19. | ஓசெயா | 9 | மோசம் | 2 இரா.17:1,2 |

| இஸ்ரவேல், யூத இராஜாக்கள் - ஓர் கண்ணோட்டம் | | | | |
|---|---|---|---|---|
| சாலொமோனுக்குப் பின்பு இராஜ்யம் இரண்டாகப்பிரிதல் | | | | |
| யூதா, பென்யமீன் தெற்கு இராஜ்யம் யூதா என்றழைக்கப்பட்டனர் | | | | |
| எண் | யூத இராஜாக்களின் நாமங்கள் | ஆண்ட காலம் | கர்த்தர் பார்வையில் ஆட்சி | புத்தகம் |
| 1. | ரெகொபெயாம் | 17 | மோசம் | 1 இரா.14:21–22 |
| 2. | அபியாம் | 3 | மோசம் | 1 இரா.15:1–3 |
| 3. | ஆசா | 41 | செம்மை | 1 இரா.15:9–11 |
| 4. | யோசபாத் | 25 | மிக சுமார் | 1 இரா.22:42 |
| 5. | யோராம் | 8 | மோசம் | 2 இரா.8:16–18 |
| 6. | அகசியா | 1 | மோசம் | 2 இரா.8:26,27 |
| 7. | அத்தலியாள் | 6 | – | 2 இரா.11:3 |
| 8. | யோவாஸ் | 40 | மிக சுமார் | 2 இரா.12:1,2 |
| 9. | அமத்சியா | 29 | மிக சுமார் | 2 இரா.14:1–3 |
| 10. | உசியா (அசரியா) | 52 | மிக சுமார் | 2 இரா.15:1,3 |
| 11. | யோதாம் | 16 | மிக சுமார் | 2 இரா.15:32 |
| 12. | ஆகாஸ் | 16 | மிக மோசம் | 2 இரா.16:1,2 |
| 13. | எசேக்கியா | 29 | மிக செம்மை | 2 இரா.18:1,3 |
| 14. | மனாசே | 55 | மிக மோசம் | 2 இரா.21:1,2 |
| 15. | ஆமோன் | 2 | மிக மோசம் | 2 இரா.21:19,20 |
| 16. | யோசியா | 31 | செம்மை | 2 இரா.22:1,2 |
| 17. | யோவாகாஸ் | 3 மாதம் | மோசம் | 2 இரா.23:31,32 |
| 18. | யோயாக்கீம் | 11 | மிக மோசம் | 2 இரா.23:36,37 |
| 19. | யோயாக்கீன் | 3 மாதம் | மோசம் | 2 இரா.24:8,9 |
| 20. | சிதேக்கியா | 11 | மோசம் | 2 இரா.24:18,19 |

ஆசீர்வாதங்களுக்காக நிலையான ஆசீர்வாதங்களை நாம் இழந்துவிடக் கூடாது. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, தானியேல் போன்றவர்களும் கூட ராஜாவின் கட்டளைக்குப் பயப்படாமல் கர்த்தருக்குப் பயந்ததினால் தேவன் அவர்களை உயர்த்தினார், தேவனுடைய நாமமும் மகிமைப்பட்டது.

கர்த்தருக்குப் பயப்படுதல் நமக்கு ஞானத்தைத் தரும் (நீதிமொழிகள் 1:7), கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்கு திடநம்பிக்கை உண்டு; அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும் (நீதிமொழிகள் 14:26-27), கர்த்தருக்குப் பயப்படுதல் ஆயுசு நாட்களைப் பெருகப்பண்ணும் (நீதிமொழிகள் 10:27), . . . கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும், மகிமையும், ஜீவனுமாம் (நீதிமொழிகள் 22:4), கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள் (நீதிமொழிகள் 31:30). அன்பான சகோதரிகளே ! இப்படி கர்த்தருக்குப் பயப்படும்போது நமது கைகளின் பலன் நமக்குக் கொடுக்கப்படும். நம் செய்கைகள் வாசல்களில் நம்மை புகழும் (நீதிமொழிகள் 31:30-31). நம் ஒவ்வொருவரும் சிப்பிராள், பூவாளாக மாறி கர்த்தருக்குப் பயந்து ஆசீர்வாதம் பெறுவோமாக !

---

**அக்டோபர் மாத இதழின் வேதஅறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் :**


| | | | |
|---|---|---|---|
| 1. | N.தமிழ்வாணன் | - | மேல்விசாரம் |
| 2. | S. ரேச்சல் அமுதமணி | - | மேல்விசாரம் |
| 3. | S. எஸ்தர்ராணி | - | சில்வர்புரம் |
| 4. | J. மேரி எலிசபெத் கலைவாணி | - | வத்தலகுண்டு |
| 5. | V.கோவலன் | - | மதுரை |

**அக்டோபர் மாத இதழின் விடைகள் :**

| | | |
|---|---|---|
| 1. எரேமியா | எரேமியா 18:18 | 6. நீதிமான்கள், பாதகர் |
| 2. எசேக்கியா | II இராஜாக்கள் 18:4 | 7. யோசேப்பு |
| 3. பேதுரு | மத்தேயு 16:22 | 8. தன் கூலிக்கு |
| 4. பவுலை, தெர்த்துல்லு | அப்போஸ்தலர் 24:5 | 9. நிலையற்றவனாயிருக்கிறான். |
| 5. பவுல் | பிலிப்பியர் 1:23 | 10.முறிக்கவில்லை. |

**உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன் !**
**நாள் முழுவதும் அது என் தியானம் சங்கீதம் 119:97**

## அவர் இன்றும் ஜீவிக்கிறார்




அவர் யார் ? அவர் தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து.

*-The Bible Teacher*

## இம்மாத வேத அறிவுப்போட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து விடை மட்டும் எழுதி இம்மாதம் 25ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும்.

1. தேவன் லேகியிலுள்ள பள்ளத்தை பிளக்கப் பண்ணி யாருக்கு தண்ணீர் கொடுத்து உயிர் பிழைக்கப்பண்ணினார்?
2. நீங்கள் எல்லாரும் காரியத்துக்குதவாத வைத்தியர்கள் என்று யார் சொல்வது?
3. மனோ துக்கத்தினாலே ஆவி எப்படி போம்?
4. எப்படிப்பட்ட மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்?
5. பூலோகத்திலே நீங்கள் எவைகளை கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் என்ன செய்யப்பட்டிருக்கும்?
6. யாருடைய யோசனைகள் வீணென்று கர்த்தர் அறிந்திருக்கிறார்?
7. மரித்தோர் உயிரோடெழுந்திருக்கும் போது கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை. அவர்கள் பரலோகத்திலிருக்கிற யாரைப்போல இருக்கிறார்கள்?
8. வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறவர் யார்?
9. நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவர் யார்?
10. சாகிறவனுடைய சாவை யார் விரும்புகிறதில்லை?

**இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபிரெயர் 13:8).**

**MONTHLY MAGAZINE**

Regd. No. 84661 - 92

Postal Regn.No.TN/DDL/19

**Edited by B.Arjunan on behalf of Church of Christ**

2.2.102-D/5 Rajan Nagar

*Batlagundu and Printed at Novelty Press for Shanthi Printers*

**BATLAGUNDU - 624 202.**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கின்றோம்

ஞாயிறு காலை 9.00 மணி

வியாழன் மாலை 6.45 மணி



**கிறிஸ்துவின் சபை**

*2.2.102-D/5 ராஜன்நகர்*

வத்தலக்குண்டு - 624 202

திண்டுக்கல் மாவட்டம்.

Phone: (04543) 23278

To

From

**WORD OF CHRIST**

*POST BOX NO.5*

**BATLAGUNDU - 624 202**

*S.INDIA.*